தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 097 /ந/2023
நாள் 05.07.2023

திரு. V. P. சங்கர்,
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விஸ்தரிப்பு, ரிசர்வாயர் ரோடு, கதவு எண் 141/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. P. சங்கர் என்பவரின் 03.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.04.2023 அன்று பெறப்பட்டு 097/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, வாகைக்குளம் விஸ்தரிப்பு, ரிசர்வாயர் ரோடு, கதவு எண் 141/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. P. சங்கர் என்பவர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP – 2020–2021 ) திட்டத்தின்கீழ் துறையூர் நகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 25.02.2021 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி, 4 சிப்பங்களாக கோரப்பட்டது. அதன்படி 1வது சிப்பம் – ரூ 1,83,00,000/– , 2வது சிப்பம் – ரூ 1,11,00,000/–, 3வது சிப்பம் – ரூ 1,83,00,000/– மற்றும் 4வது சிப்பம் – ரூ 1,23,00,000/– ஆக மொத்தம் ரூ 6 கோடிக்கு மேற்கண்ட பணிகள் 2021 பிப்ரவரி மாதம் சட்டமன்ற தேர்தல் சம்பந்தமான நடைமுறைகள் தேதி அறிவிப்பு தொடங்குவதற்கு முன்னரே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பணி உத்தரவும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு 26.02.2021 அன்றே வழங்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் துறையூர் நகராட்சியில் ஆணையராக பணியாற்றிய திரு.அ.வீரமுத்துக்குமார் என்பவரும், நகராட்சி பொறியாளராக திரு.ரவிச்சந்திரன் மற்றும் உதவிப்பொறியாளராக திரு.வே.வெங்கட்ராமன் என்பவரும் பணிபுரிந்து வந்தனர்.

சட்டமன்ற தேர்தல் நடந்து முடிந்து, தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்றபின் நான்கு சிப்பத்திற்குண்டான பணிகள் துவங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்த நேரத்தில்

அப்போதைய நகராட்சி ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடந்த 17.08.2021 நாளிட்ட ந.க.எண்.185/2021/இ1 கடிதத்தில் 2020–2021 TURIP GRANT விடுவிக்கக் கோரி கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் 30 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்குண்டான TURIP GRANT நிதியினை துறையூர் நகராட்சிக்கு விடுவிக்கக் கோரியும் கடிதம் எழுதியுள்ளார்.

அப்போதைய நகராட்சி ஆணையர் திரு. அ. வீரமுத்துக்குமார் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பிய தனது 08.09.2021 நாளிட்ட கடிதத்தில் துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020–2021-ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளில் 4வது சிப்பப்பணிகள் முழுவதும் முடிவுற்றதாகவும், மீதமுள்ள 3 சிப்பப்பணிகள் 40 சதவிகிதம் பணிகள் நிறைவுற்றதாகவும் தெரிவித்து TURIP GRANT நிதியினை விடுவிக்கக் கோரி கடிதம் எழுதியுள்ளார். அந்த காலக்கட்டத்தில் முன்னாள் பொறியாளர் திரு.ரவிசந்திரன் மற்றும் உதவிப்பொறியாளர் திரு.வே.வெங்கட்ராமன் ஆகியோர் துறையூர் நகராட்சியில் பணியில் இருந்துள்ளார்கள் என்பது உண்மை.

இச்சூழ்நிலையில் ஆணையர் திரு. அ. வீரமுத்துக்குமார் மற்றும், நகராட்சி பொறியாளர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் பணி மாறுதல் ஆகி வெவ்வேறு நகராட்சிக்கு சென்று விட்டனர். அதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டி, அப்போதைய மேலாளர் மற்றும் ஆணையர் பொறுப்பு வகித்த திரு.முருகராஜ் என்பவரும், நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி என்பவரும் தங்களுக்கு ஒத்துவராத உதவிப் பொறியாளர் திரு.வே.வெங்கட்ராமன் என்பவரை மருத்துவ விடுப்பில் செல்ல சொல்லிவிட்டு 08.11.2021 அன்றுமுதல் அவர் மருத்துவ விடுப்பில் சென்றவுடன் நகரமைப்பு ஆய்வாளர் திரு.ஜி.கே.பாலசுப்ரமணியம் என்பவரை உதவிப் பொறியாளர் பணியினை கூடுதல் பொறுப்பாக கவனித்துவர, 08.11.2022 ஆம் தேதியன்று ஆணையர் பொறுப்பு வகித்த பொறியாளர் திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி என்பவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆனால் முன்னாள் ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார், நகராட்சி பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் ஆகியோர் துறையூர் நகராட்சியிலிருந்து பணிமாறுதலில் செல்லும் காலம்வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் சிப்பம் 4-க்கான பணிகள் முடிந்துவிட்டதாகவும், மீதமுள்ள 3 சிப்பப்பணிகள் 40 சதவீகிதம் பணிகள் முடிக்கப்பட்டதாகவும், தெரிவித்து TURIP GRANT நிதியை விடுவிக்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில், 1,2,3 சிப்பப்பணிகள் மற்றும் 4வது சிப்பப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, உதவிப்பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் அவ்வப்போது அளவீடுகள் மற்றும் ஒவ்வொரு பணியும் நிறைவடையும் போது (கப்பி, ஜல்லி பரப்பும் பணி, தார் நிரப்பும் பணி, தார் ஜல்லி நிரப்பும் பணி, சிறு ஜல்லி தார்கலவை பொடி) பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வந்த Measurement Book ஆகியவற்றை மறைத்துவிட்டு, நகராட்சி பொறியாளராக பணியாற்றிய திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி மற்றும் மேலாளர், ஆணையர் (பொறுப்பு) பதவி வகித்த திரு.முருகராஜ், உதவிப்பொறியாளர் பொறுப்பு வகித்த நகரமைப்பு ஆய்வாளர் திரு.ஜி.கே.பாலசுப்ரமணியன் ஆகிய மூவரும் கூட்டாக சேர்ந்து துறையூர் நகராட்சியில் புதியதாக பணிகள் சிப்பம் 1, 2, 3 மற்றும் 4 ஆகியவற்றிற்கு பணிகள் கடந்த 2021 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் டிசம்பர் 2021-ல் பணிகள் முடிக்கப்பட்டதாகவும், மொத்தமுள்ள 4 சிப்பத்திற்குண்டான பணிகளில் ஒவ்வொரு சிப்பத்திற்குண்டான பணிகளும் GSB, WMM (Wet Mix Macadam) Take coat, DBM (Dense Bituminous Macadam) மற்றும் BC (Bituminous Concert) ஒவ்வொரு தேதிகளில் புதியதாக நடைபெற்றதாகவும், அதை Measurement Book-ல் பதிவு செய்ய, அளவுகள் முதலில் நகரமைப்பு ஆய்வாளர்

அவர்கள் மேற்கொண்டு பதிவு செய்ததாகவும், மேல்அளவுகள் நகராட்சி பொறியாளர் அவர்கள் பதிவு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக ஒப்பந்தக்காரருக்கு மேலாளர் மற்றும் ஆணையர் பொறுப்பு வகித்துவந்த திரு.மா.முருகராஜ் அவர்கள் பணிநிறைவு பெற்றதற்கான தொகைகள் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

முன்னாள் நகராட்சி ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார், பொறியாளர் திரு.ரவிச்சந்திரன், உதவிப்பொறியாளர் திரு.வே.வெங்கட்ராமன் ஆகியோர் துறையூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP GRANT 2020–2021) திட்டத்தின்கீழ் தார்சாலைகள் மற்றும் வடிகால் அமைத்தல் பணிகளுக்கான சிப்பம் 1,2,3 மற்றும் 4–க்கான எந்த பணிகளும் மேற்கண்ட மூவரின் பணிக்காலங்களில் நடைபெறவில்லையா, சிப்பம் 1,2,3 மற்றும் 4–க்கான பணிகள் சம்பந்தமான TURIP GRANT 2020–2021–க்கான நிதிகளை விடுவிக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அப்போதைய ஆணையர் அவர்களால் கடந்த 17.08.2021 மற்றும் 08.09.2021 ஆகிய தேதிகளில் எழுதிய கடிதங்கள் பொய்யானவையா, மேலும் மேற்கண்ட மூவரின் பணிகாலங்களில் சிப்பம் 1, 2, 3 மற்றும் 4–க்குரிய பணிகள் ஏதும் நடைபெறவில்லையா என்ற சந்தேகம் எழுகிறது.

17.08.2021 மற்றும் 08.09.2021 நாளிட்ட கடிதங்களில் ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார் சிப்பம் 4–க்கான பணிகள் முழுவதும் முடிவுப்பெற்றதாகவும், மீதமுள்ள சிப்பம் 1, 2, 3–க்கான பணிகள் 40 சதவிகிதம் முடிவுற்றதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில், துறையூர் நகராட்சியில் மேலாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) பதவி வகித்த திரு.மா.முருகராஜ், நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி மற்றும் உதவிப்பொறியாளர் பொறுப்பு வகித்த திரு.ஜி.கே.பாலசுப்ரமணியன் ஆகிய மூவரும் கூட்டுசேர்ந்து கடந்த 2021 நவம்பர் மாதம் மேற்கண்ட பணிகளுக்கான (சிப்பம் 1,2,3 மற்றும் 4) பணிகள் ஆரம்பிக்கப்பட்டு டிசம்பர் 2021–ல் முடிக்கப்பட்டதாகவும் பொய்யான ஆவணங்களை உருவாக்கியுள்ளார்கள். முன்னாள் ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார் கடந்த 08.09.2021–ல் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சிப்பம் 4–க்கான பணிகள் முழுவதும் முடிவடைந்துவிட்டதாக அதிகாரப்பூர்வமாக கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் நான் அனுப்பிய மனுவிற்கு சிப்பம் 4–க்கான பணிகள் புதிதாக பணி 20.12.2021 அன்று தொடங்கப்பட்டு 10.01.2022 அன்று முடிக்கப்பட்டது எனவும் மற்றும் கீழ்க்கண்ட தேதிகளில் பணிகள் நடைபெற்றுள்ளதாகவும் எனக்கு கடந்த 13.12.2022–ல் துறையூர் நகராட்சி பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் மேலாளர் திரு.மா.முருகராஜ் என்பவரால் கடிதம் அனுப்பப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| WMM (Wet Mix Macadam) | – | date | 24.12.2021 |
| அ) | | | |
| Take Coat | | | 29.12.2021 |
| DBM | | | 29.12.2021 |
| BC | | | 10.01.2022 |

ஆ) அளவுகள் பதிவு செய்யப்பட்ட தேதி

| | | | |
|---|---|---|---|
| WMM | – | date | 24.12.2021 |
| Take Coat | | | 29.12.2021 |
| DBM | | | 29.12.2021 |
| BC | | | 10.01.2022 |

இ) மேல் அளவுகள் பதிவு செய்யப்பட்ட தேதி

| | | |
|---|---|---|
| WMM | – date | 27.12.2021 |
| Take Coat | | 30.12.2021 |
| DBM | | 30.12.2021 |
| BC | | 10.01.2022 |

ஆகவே, முன்னாள் நகராட்சி ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார், நகராட்சி பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் உதவிப்பொறியாளர் திரு.வே.வெங்கட்ராமன் ஆகியோரின் பணிக்காலத்தில் பணிகள் முடிக்கப்பட்டும், ஒருசில பணிகள் 40 சதவிகிதம் நடைபெற்றுக்கொண்டு இருந்ததை மறைத்தும் மற்றும் அப்போதைய காலகட்டத்தில் அளவீடுகள் பதிவு செய்யப்பட்ட Measurement Book–யும் மறைத்து, ஏதோ தங்கள் காலத்தில்தான் புதியதாக சிப்பம் 1,2,3 மற்றும் 4–க்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது போலவும், ஒரே மாதத்தில் பணிகள் முடிக்கப்பட்டது போலவும் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நகராட்சி மேலாளர் திரு.முருகராஜ், நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திரு.ஜி.கே.பாலசுப்பிரமணி ஆகிய மூவரும் கூட்டு சதி செய்து போலியான Measurement Book தயார் செய்து ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்கியுள்ளார்கள் என்பது நிரூபணமாகிறது.

எனவே, தாங்கள் தயவு செய்து இப்புகார் மனு குறித்து பணிகள் சம்பந்தமாகவும் மற்றும் அலுவலக ஆவணங்களையும் ஆராய்ந்து உண்மைநிலையை கண்டறிந்து, உண்மையை மறைத்து போலியாக ஆவணம் தயார் செய்த மூவர் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தக்க நீதிவழங்க மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் என்னை விசாரணைக்கு அழைக்கும்பட்சத்தில் நான் நேரில் ஆஜராகி முன்னாள் ஆணையர் திரு. அ. வீரமுத்துக்குமார், பொறியாளர் திரு.ரவிச்சந்திரன் உதவிப்பொறியாளர் திரு.வே.வெங்கட்ராமன் ஆகியோரின் பணிக்காலங்களில் நடைபெற்ற பணிகள் சம்பந்தமான போட்டோ ஆல்பத்தை தங்களிடம் நேரில் சமர்ப்பிக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

துறையூர் நகராட்சிப் பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு வகிக்கும் திரு.ஆர்.கே.தாண்டவமூர்த்தி என்பவர் தனது 19.05.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

துறையூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP 2020–21) Phase II திட்டத்தின்கீழ் தார்சாலைகள் மற்றும் வடிகால் அமைத்தல் பணிகளுக்கு ரூ 600.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மானியம் பெறுவதற்கும் 4 சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள பணிகள் தேர்வு செய்து நகர்மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.600 நாள் 29.01.2021–ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துருவானது துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.185/2021/இ1 நாள் 11.02.2021–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகை ரூ 6.00 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி

ரூ.5.40 கோடியும், நகராட்சி பங்களிப்பு ரூ 0.60 கோடியாகவும் இருந்ததால், நகராட்சி நிர்வாக பங்குத்தொகை செலுத்துவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.644 நாள் 12.02.2021–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு, நிர்வாக அனுமதிக்காக கடிதம் ந.க.எண்.185/2021/இ1 நாள் 12.02.2021–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் 12.02.2021 ஆம் தேதிய ந.க.எண்.1116/2020/இ1 எண்ணுள்ள கடிதம் மூலமாக பரிந்துரைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 15.02.2021 ஆம் தேதிய ந.க.எண்.9025/2020/இ3 செயல்முறை ஆணையின்படி திட்ட அனுமதியும், நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டது.

மேலே கண்ட நிர்வாக அனுமதியின்படி இப்பணிகள் 4 சிப்பங்களாக பின்வருமாறு பிரிக்கப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | <u>சிப்பம் –I</u><br>வார்டு எண்.24 எக்ஸ்டென்சன் (KVB பின்புறம்) பகுதி, வார்டு எண்.9, பெரியார் நகர், வார்டு எண்.19, அம்மாபட்டி சாலை, வார்டு எண்.9,18 சாமிநாதன் நகர் மற்றும் சொரத்தூர் ரோடு பகுதி, வார்டு எண்.24 செல்வம் நகர் மற்றும் அஷ்டலெட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் புதிய தார்சாலை அமைத்தல். | 3.420 | 4.10<br>4.20 | 183.00 |
| 2. | <u>சிப்பம் –II</u><br>வார்டு எண்.10,11,12 மற்றும் 13 உயர்நிலைப்பள்ளி சாலை மற்றும் மருத்துவமனை சாலை பகுதி, வார்டு எண்.2 பெருமாள் கோவில் பிரதான தார்சாலை புதுப்பித்தல் பணி மற்றும் வார்டு எண்.1 ஆத்தூர் ரோடு இடுகாடு சாலை பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல். | 1.490 | 5.00<br>5.80<br>6.00 | 111.00 |
| 3. | <u>சிப்பம் –III</u><br>வார்டு எண்.24, குடில் ரோடு மற்றும் எக்ஸ்டென்சன் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 1.350 | 5.00 | 183.00 |
| 4. | <u>சிப்பம் –IV</u><br>வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை (பிரதான சாலை) நெசவாளர் காலனி, மலையப்பன் சாலை ஆகிய பகுதிகள், வார்டு எண்.23 கூட்டுறவு நகர், வார்டு எண்.23, ஆஞ்சநேயர் நகர் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் ஆகிய பணிகள். | 1.900 | 4.10<br>5.00<br>5.70 | 123.00 |
| | மொத்தம் | 8.160 | | 600.00 |

மேற்கண்டவாறு 4 சிப்பங்களாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு துறையூர் நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.185/2021/இ1 நாள் 15.02.2021–ல் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.1116/2020/இ1 நாள் 15.02.2021 கடிதத்தின்படி நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை தலைமைப் பொறியாளருக்கு பரிந்துரைக்கப்பட்டு, தலைமைப்பொறியாளரின் செயல்முறை ஆணை எண். 25039/2019/DO2 நாள் 16.02.2021–ல் 4 சிப்ப பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ 600.00 இலட்சங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் அரசின் திட்டப்பணிகள் என்பதாலும், அப்போது மார்ச் 2021 –ம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைமுறைகள் அமலாக இருந்ததைக் கருதி, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி 2000–த்தின்படி கால நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரினால் ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து பணி துவங்க இயலாத நிலை ஏற்படும் என கருதியும், மார்ச் 31–க்கு பிறகு தரப்படுத்தப்பட்ட பொருட்களின் விலைவிகிதம் உயரும் என்பதாலும் மதிப்பீட்டை விட தொகை கூடுதலாக ஏற்படும் என கருதி, குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கேட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு துறையூர் நகராட்சி அலுவலக கடித ந.க.எண்.185/2021/இ1 நாள் 16.02.2021–ல் அனுமதி கோரப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 16.02.2021 ஆம் தேதிய ந.க.எண்.1116/2020/இ1 கடிதத்தின் மூலமாக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 துணை விதி 20(2)ன்படி 7 நாட்கள் இடைவெளிக்கு குறையாமல் கால இடைவெளியில் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ஒரு ஆங்கிலம் மற்றும் ஒரு தமிழ் தினசரி நாளிதழிலும் 17.02.2021–ல் வெளியிடக் கேட்டு இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அவர்களுக்கு துறையூர் நகராட்சி அலுவலக கடித ந.க.எண்.185/2021/இ1, நாள் 16.02.2021–ல் அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வாறு செய்தி ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் 17.02.2021 அன்று வெளியாகியுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இணையதளத்திலும் வெளியிடப்பட்டது.

25.02.2021 ஆம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்ய தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு ஒன்று நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண்.185/2021/இ1 நாள் 25.02.2021–ல் நியமிக்கப்பட்டது. இந்த கூர்ந்தாய்வு குழுவில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள 4 ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டினை விட 5 சதவீதம் கூடுதல் என்ற அளவிற்கு மிகாமல் உள்ளது என்பதாலும், தேர்தல் நன்னடத்தை விதி அமுல்படுத்த இருந்ததாலும், அடுத்து வரக்கூடிய நிதியாண்டில் கூடுதல் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், திட்டப்பணியினை விரைந்து முடிக்கவும், மதிப்பீட்டை விட 5 சதவீதம் கூடுதலுக்கு உட்பட்டு மன்ற வரம்பிற்குள் இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க பரிந்துரை செய்யப்பட்டவாறு நகர்மன்ற தீர்மான எண்.646 நாள் 26.02.2021–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி மூன்று மாத காலத்திற்குள் முடிக்க பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2020 – 21 சட்டமன்ற பொதுத்தேர்தல் அறிவிப்பு வெளியானதால் பணியினை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்க துறையூர் நகராட்சி அலுவலக 27.02.2021 தேதிய ஆணையில் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மீளவும் இப்பணிகள் ஆரம்பித்த காலம் மற்றும் முடிவுபெற்ற காலம் அளவுச்சுவடிகளில் உள்ள பதிவுகள் மற்றும் ஆவணங்களின்படி பின்வருமாறு உள்ளது.

| சிப்பங்கள் | ஆரம்பிக்கப்பட்ட தேதி | அளவுச் சுவடியில் அளவுகள் பதிவு செய்யப்பட்ட தேதி | நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் சோதனை அளவு தேதி | முடிவுற்ற தேதி | ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| சிப்பம் –I | 16.11.2021 | 16.11.2021 | 16.12.2021 | 22.12.2021 | 25.03.2022 |
| சிப்பம் –II | 20.12.2021 | 20.12.2021 | 21.03.2022 | 16.03.2022 | 24.03.2022 |
| சிப்பம் – III | 15.11.2021 | 15.11.2021 | 16.12.2021 | 22.12.2021 | 24.03.2022 |
| சிப்பம் – IV | 04.12.2021 | 04.12.2021 | 16.12.2021 | 10.01.2022 | 07.04.2022 |

மேற்படி பணிகள் நடைபெறும் போது ஒவ்வொரு நிலையிலும் அளவுச்சுவடிகள் முறையாக பதிவு செய்யப்பட்டு சோதனை அளவுகள் தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மண்டல செயற்பொறியாளரால் சோதனை அளவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இதில் எவ்வித முறைகேடுகளுக்கும் இடமில்லை. புகார்தாரரால் தெரிவிக்கப்பட்ட புகாரில் உதவிப் பொறியாளர் திரு.வெங்கட்ராமன் என்பவரை மருத்துவ விடுப்பில் அனுப்பிவிட்டு திரு.பாலசுப்ரமணியம், நகரமைப்பு ஆய்வர் கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டு அளவுச்சுவடிகள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது தவறானதாகும். திரு.வெங்கட்ராமன், உதவிப்பொறியாளர் 08.11.2021 அன்று மருத்துவ விடுப்பில் சென்றுவிட்டார். அவர் வேண்டுமென்று மருத்துவ விடுப்பில் சென்றதாக நிர்வாகத்தால் கருதி மருத்துவ குழுமத்திற்கு (Medical Board) அனுப்பி வைக்கப்பட்டார். மாவட்ட மருத்துவ குழுமத்தால் அவருக்கு உடற்தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டதன் அடிப்படையில் பணியில் வந்து சேர்ந்த அவர், அன்று பிற்பகலே ஈட்டிய விடுப்பு கேட்டு விண்ணப்பம் செய்துவிட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு அவர் மாறுதலில் மயிலாடுதுறை நகராட்சிக்கு சென்றுவிட்டார். ஆகவே அவரை மருத்துவ விடுப்பில் செல்ல யாரும் வற்புறுத்தவில்லை. இவர் மருத்துவ விடுப்பில் சென்றதால் ஏற்பட்ட காலியிடத்திற்குதான் மாற்று ஏற்பாடாகவும், பணி பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், நிர்வாக நலன் கருதியும் பணியிடத்திற்கு தகுதியான திரு.பாலசுப்ரமணியன் கூடுதல் பொறுப்பாக கவனித்து வர பணிக்கப்பட்டது. ஆகவே, புகாரில் தெரிவிக்கப்பட்ட விவரம் தவறானது, வேண்டுமென்றே கற்பனையாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர், திரு.வீரமுத்துக்குமார், ஆணையர், திரு.ரவிச்சந்திரன், நகராட்சிப் பொறியாளர், திரு.வெங்கட்ராமன், உதவிப்பொறியாளர் ஆகியோர் பணியில் இருந்தபோது இப்பணிகள் நடைபெறவில்லையா என கேட்டுள்ளார். அவர்கள் இருந்தபோது பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் இருந்தது. ஆகவே அப்போது இருந்த ஆணையர் பணியை விரைவுபடுத்தும் நோக்கத்திலும், பணி முடிவுபெறும்போது பட்டியலுக்கு விரைவாக பணம் பட்டுவாடா செய்யும் நோக்கத்திலும் விரைவாக திட்டத்திற்கான தொகையை விடுவிக்கக் கேட்டு 17.08.2021 மற்றும் 08.09.2021 தேதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் எழுதியுள்ளார் என தெரிகிறது. இப்பணிக்கான தொகை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து 07.02.2022 தேதியில்தான் வரப்பெற்றுள்ளது. ஆனால் அப்போது பணி நடைபெற்றதற்கான அளவுச்சுவடி பதிவு ஏதும் இல்லை. மேலதிகாரியான மண்டல செயற்பொறியாளரும் அப்போது எதுவும் சோதனை அளவு செய்திருக்கவில்லை. திரு.வெங்கட்ராமன் உதவிப்பொறியாளர் மாறுதலில் சென்ற போது அவரால் எவ்வித அளவுச்சுவடிகளும் பணி ஒப்படைப்பு செய்யப்படவில்லை. மேற்குறிப்பிட்ட திட்டப்பணியானது மேலே குறிப்பிட்ட அளவுச்சுவடிகளில் குறிப்பிட்ட கால அளவில்தான் முடிவுற்று தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இதில் எவ்வித நிர்வாக விதி மீறலோ மற்றும் நிதியிழப்போ

ஏதுமில்லை. ஏனவே, இப்புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது ஏதும் உண்மை இல்லை என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் துறையூர் நகராட்சி ஆணையரும் 19.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. V. P. சங்கர் 19.06.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சியில் TURIP 2020–21 திட்டத்தின் கீழ் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகளை மேற்கொண்டபோது அளவீட்டுப் புத்தகத்தை ( M Book) மாற்றி, வேறு அளவீட்டுப் புத்தகங்களில் பதிவு மேற்கொள்ளப்பட்டது மற்றும் செய்த பணிகளை மறைத்தது குறித்தான எனது 19.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, இந்நேர்வு குறித்த புகைப்படங்கள் அடங்கிய CD, மேற்கண்ட பணிகளில் 30 சதவீதப் பணிகள் முடிவடைந்ததாகத் தெரிவித்து, TURIP நிதியை விடுவிக்கக் கோரி 17.8.2021 மற்றும் 8.9.2021 ஆகிய நாட்களில் துறையூர் நகராட்சி ஆணையரால் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் 19.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு, தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சியில், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP 2020-21) Phase II திட்டத்தின் கீழ் தார்சாலைகள் மற்றும் வடிகால் அமைத்தல் பணிகளுக்கு ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் பணிகள் 4 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டது. முறையான திட்ட அனுமதி மற்றும் நிர்வாக அனுமதியுடனும், நகர்மன்றத் தீர்மானத்தின்படியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகள் குறித்த நேரத்திலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையிலேயே பணிகள் முடிக்கப்பட்டன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட பணிகள் தொடங்கப்பட்டு, அவை முடிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| சிப்பங்கள் | பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் | அளவீட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட நாள் | பணிகள் முடிவுற்ற நாள் |
|---|---|---|---|
| சிப்பம் – I | 16.11.2021 | 16.11.2021 | 22.12.2021 |
| சிப்பம் – II | 20.12.2021 | 20.12.2021 | 16/03/2022 |
| சிப்பம் – III | 15.11.2021 | 15.11.2021 | 22.12.2021 |
| சிப்பம் – IV | 04.12.2021 | 04.12.2021 | 10.01.2022 |

மேற்கண்ட சிப்பப் பணிகளில் 30 முதல் 40 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, பணிகளை மேலும் மேற்கொள்வதற்கு, திட்டத் தொகையை விடுவிக்கக்கோரி 17.08.2021 மற்றும் 08.09.2021 ஆகிய தேதியில் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு துறையூர் நகராட்சி ஆணையரால் கடிதம் எழுதப்பட்டு மேற்கண்ட பணிகளுக்கான தொகை 07.02.2022 அன்று வரப்பெற்றுள்ளது எனவும், துறையூர் நகராட்சியில் பணிகள் நடைபெற்றதற்கான அளவுச்சுவடி பதிவு ஏதும் இல்லை எனவும், மண்டல செயற்பொறியாளரும் சோதனை அளவு மேற்கொள்ளவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட 19.05.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, பணிகள் மேற்கொண்டபோது மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுப் புத்தகத்தின் பதிவு குறித்த நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், துறையூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP – Tamil Nadu Urban Roads Infrastructure Programme) கீழ் துறையூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலைகள் அமைக்கவும் மற்றும் வார்டு 24–ல் தார்சாலையுடன் மழைநீர் வடிகால் அமைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநரால் 15.02.2021 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் 8.160 கி.மீ நீளத்தில் தார் சாலைகள் அமைக்கவும் மொத்தம் ரூ 6.00 கோடி நிர்வாக அனுமதியும், நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் 16.02.2021 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் தொழில்நுட்ப அனுமதியும் கீழ்க்கண்ட 4 சிப்பங்களாக (Packages) வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சிப்பம் – 1 | 3.420 கி.மீ | – ரூ 183 இலட்சம் |
| சிப்பம் –2 | 1.490 கி.மி | – ரூ 111 இலட்சம் |
| சிப்பம் – 3 (+ வடிகால் அமைத்தல்) | 1.350 கி.மீ | – ரூ 183 இலட்சம் |
| சிப்பம் – 4 | 1.900 கி.மீ | – ரூ 123 இலட்சம் |
| மொத்தம் | 8.160 கி.மீ | ரூ 600 இலட்சம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள துறையூர் நகராட்சியின் அப்போதைய ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார் என்பவரால் 16.02.2021–ல் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Short Term Tender Notice) 16.02.2021 அன்று வெளியிடப்பட்டு, 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு 26.02.2021 அன்றே பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இதனை தொடர்ந்து அப்போதைய துறையூர் நகராட்சி ஆணையர் திரு.அ.வீரமுத்துக்குமார் என்பவர் நகராட்சி அலுவலகக் கடித எண்.185/2021/இ1, 17.08.2021 நாளிடப்பட்ட கடிதத்தில் TURIP 2020–21 திட்டத்தின்கீழ், தற்போது 30 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால், இத்திட்ட நிதியினை விடுவிக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் மூலம் கோரியுள்ளார். இக்கடிதத்தின் நகலானது தஞ்சாவூர் நகராட்சி

நிர்வாக மண்டல இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. தவிர அப்போதைய நகராட்சி ஆணையாளர் மீண்டும் 08.09.2021 நாளிட்ட கடிதத்தில் நான்கு சிப்பப் பணிகளில், நான்காவது சிப்பப்பணிகள் முழுவதும் முடிந்து விட்டதாகவும், 1, 2 மற்றும் 3வது சிப்பப்பணிகளில் 40 சதவீதப் பணிகள் முடிவு பெற்றுள்ளதால் இத்திட்ட நிதியினை விடுவிக்க நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் மீண்டும் கோரியுள்ளதையும், இதன் நகலையும் தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி உள்ளதும் ஆவணங்களின் வாயிலாக தெரியவருகிறது.

தற்போது ஆணையர் பொறுப்பில் இருக்கும் துறையூர் நகராட்சி பொறியாளர் தனது விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் TURIP திட்டத்தில் 2020-21 ஆம் ஆண்டிற்கான 4 சிப்பப்பணிகள் 16.11.2021 அன்று ஆரம்பிக்கப்பட்டு 10.01.2022 அன்று முடிவுற்று தஞ்சாவூர் நகராட்சி மண்டல செயற்பொறியாளரால் சோதனை அளவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொண்டதற்கான அளவுப் புத்தகங்களின் (M- Book) நகல்களையும் அளித்துள்ளார். இந்நிலையில் முன்னாள் நகராட்சி ஆணையர் திரு.வீரமுத்துக்குமார் 4–வது சிப்பப்பணி முழுவதும் முடிவு பெற்றதாக தனது 08.09.2021 நாளிட்ட கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும் தெரிவித்துள்ள நிலையில், இக்கடிதங்களை கருத்திற் கொள்ளாமல் தஞ்சவூர் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் எந்த அடிப்படையில் 16.11.2021 அன்றுதான் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 10.01.2022 அன்று முடிவு பெற்றதாக சோதனை அளவு செய்துள்ளார் என்கிற வினா எழுகின்றது. இது மோசடியான ஏமாற்று செயலாகவே பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், துறையூர் நகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIP) கீழ் ரூ 6 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் அப்போதைய நகராட்சி ஆணையர் தனது 08.09.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் 40 % பணிகள் முடிவு பெற்றதாகவும் மற்றும் 4–வது சிப்பப்பணிகள் முழுவதும் முடிவு பெற்றதாகவும் தெரிவித்து நிதி விடுவிக்கக் கோரிய நிலையில், தற்போதைய நகராட்சி ஆணையர் (பொ) மேற்படி பணிகள் 16.11.2021 அன்று ஆரம்பிக்கப்பட்டு 10.01.2022 அன்றுதான் நிறைவு பெற்றுள்ளதாக தெரிவிப்பதன் மூலம் மேற்காணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தேதிகளில் முரண்பாடுகள் உள்ளதால், ஆவணங்களை கையாண்டதில் முறைகேடுகள் நடைபெற்று இருக்கலாம் என்ற அய்யப்பாடு எழுகின்றது.

ஆகவே, இந்நேர்வு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சிறப்பு தணிக்கை செய்து அதன் அறிக்கையினை 3 ( மூன்று ) மாதக் காலத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையில் முறைகேடுகள் கண்டறியப்பட்டால் முறைகேடுகளுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அனைத்து நகராட்சி அலுவலர்கள் / பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இவ்வாணையின் நகல் அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

This Forum has serious apprehensions and doubts over the veracity of the Municipality's version in as much as the former Commissioner in his letter dated 17.08.2021 had reported that 30% of the works were completed and requested release of funds from DMA. The contradiction in the dates committed by the Commissioner of Thuraiyur Municipality raise suspicions about the motives of the officials as alleged by the petitioner. The credibility of the report of the Thuraiyur Municipality is almost nil. Hence to make the air clear, the Director of Local Fund Audit is directed to take up a special audit of the TURIP Scheme execution in Thuraiyur Municipality, find out whether "M" Books have been replaced, tampered with or fabricated as alleged by the petitioner. A report may be sent to this Forum in the next 45 days. The DMA is directed to watch the progress of carrying out the directions of the Forum and launch disciplinary action against the delinquent officials if any deviations are brought to notice during the audit of the Local Fund Team.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V.P. சங்கர்,
141/1, ரிசர்வாயர் ரோடு,
வாகைக்குளம் விஸ்தரிப்பு, மணப்பாறை – 621 306.

2) ஆணையாளர், துறையூர் நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாகம் இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

6) நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 600 009.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்

18/07/23